பாலர் கல்வி

தொகுதி 28 | சோபகிருதுஸு ஆனி - ஆடி மீ 1963 ஜூலை | பகுதி 4

தென்னிந்தியா ஆசிரியர் சங்கம்-இயக்கக் குழுவின் கூட்டம்

மேற்கண்ட இயக்கக் குழுவின் கூட்டம் இவ்யாண்டிற்கு முதன் முதலாகச் சென்னையில் ஆசிரியர் சங்கத்தின் காரியாலயத்தில் 29-6-63 அன்று முற்பகல் 11 மணிக்குக் கூடிற்று. இராச்சியத்தின் பகுதிகளிலிருந்து மாவட்ட ஆசிரியர் கழகங்களின் பிரதிநிதிகள் பலர் கூடி, இவ்யாண்டு செய்ய வேண்டுவன பற்றி ஆலோசனை செய்தனர். சங்கத் தலைவர், திரு A. K. சீதாராமன் அவர்கள் பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறினர்; செயலர் திரு T.S. ராஜகோபாலன் அவர்கள் முன் நிகழ்ந்த கூட்டத்தின் குறிப்புக்களைப் படித்தார்; இவை ஏற்றுக்கொள்ளப் பெற்றன.

கூட்டத்தில் நிகழ்ந்த ஆலோசனைகளுள் இரண்டு மிக முக்கியமானவையாகும். முதலாவது பள்ளிகளில் பாடங் கற்பிக்கும் நாட்களை 200 யிலிருந்து 220 வரை உயர்த்துவதாம். இவ்வாறு உயர்த்துவது கற்போர்களது மன வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் ஏற்றதன்று எனக் கோவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை வலியுறுத்தி, ஆசிரியர்கட்கும் இது கேட்டினை விளைவிக்கும் எனக் கருதினர், அநுபவம் வாய்ந்தவர்கள். 200 நாட்கள் பணி செய்யும்போதே ஆசிரியர்களது பணிச் சுமை தாங்கக் கூடியதன்று; கிரமமாகச் சொல்லிக் கொடுக்கவேண்டிய பாடங்களே யன்றிப் பாடத் திட்டத்திற்குப் புறம்பானவற்றிற்கும் (extra-curricular activities) ஆசிரியர் பாடுபடுவதுடன் 50 சிறுவர்களும், அதற்கும் மேலுமுள்ள வகுப்பறைகளில் உழைப்பதால், ஆசிரியரின் உடல்நிலை குன்றுவதுடன் கற்பிக்கும் கல்வியின் தரமும் தாழ்ந்துவிடுமென்று இவர்கள் கருதினர்கள். இந்நாட்டின் நிலைமைக்கேற்ப, எத்தனை நாட்கள் பாடங் கற்பிக்கலாம் என்பதை ஆராய்ச்சி முறையிலே நிர்ணயஞ் செய்யவேண்டுமெனப் பகர்ந்தனர் பெரியோர்.

உயர்நிலைப் பள்ளிகளில் 11ஆண்டுகள் கல்வி கற்பிப்பதை ஏற்றுக்கொண்டிருப்பதால், பதினோராம் ஆண்டின் இறுதியில் கற்றுள்ள கல்வியின் தரம், நம் நாட்டில் மற்றை இராச்சியங்களில் இதே நிலையில் இருந்துவரும் தரத்திற்குச் சமமாக வேண்டுமென்று எடுத்தோதினர் இயக்கக் குழுவினர். இப்போது எட்டாம் படிவத்திற்காகவுள்ள பாட திட்டத்தைத் தாத்காலிகமாகக் கொண்டாலும், பாடதிட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்து, கல்வியின் தரம் முன்னிலும் ஓங்கச்செய்ய வேண்டும் என்ற கருத்தினையுந் தெரிவித்தனர்.

இவ்வாண்டிலே பள்ளிகளில் இட நெருக்கடியை ஒருவாறு தவர்த்திருக்

சிக்கனம், சேமிப்பு, கடும் உழைப்பு :

ஆசிரியர்களே,

தாய் நாட்டைப் பாதுகாக்க
உங்கள் கடமையைச் செய்தீர்களா ?

கலாமென்றும், ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் வரும் ஆண்டிற்கு வேண்டிய இடங்களையும் ஆசிரியர் களையும் பற்றி முன் கூட்டாகத் தீர் மானஞ்செய்தால், இவ்வாருன நெருக் கடி நீங்கலாமென்று சிலர் கூறினர். நாற்பது பேருக்கு மேல் வகுப்பறை யில் வைத்துக் கொள்வதால் சரியான வாறு கல்வி கற்பிக்க இயலாது, எனவே இப்போதுள்ள எண்ணிக்கை யைச் சிறிது சிறிதாகக் குறைத்து, வகுப்பறைக்கு 40 பிள்ளைகளுக்கு மிகா மல் இருக்குமாறு செய்தல் நலமென் றும் பிரதிநிதிகள் கூறினர்.

இக்காலத்தில் பள்ளிகளில் இன்றி யமையாதன வாசகசாலையும் விஞ் ஞான ஆராய்ச்சிக்கான உபகரணங் களுமாம். துவக்கப் பள்ளிகளுக்கு முதலில் ரூ. 1500 வும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு முதலில் ரூ. 2000 மும் மானியமாக அளித்து வாசக சாலை களைப் பள்ளிகளில் பெருகச் செய்ய வேண்டும் என்றும், விஞ்ஞான வளர்ச்சிக்காகச் செய்யவேண்டுவது, துவக்கப் பள்ளிகளிலும் உபகரணங் கள் வாங்குவதற்காக உதவியளிப்ப தாகும் என்றும் ஆலோசனை கூறினர், ஆசிரியர்கள்.

கல்வி திட்டம்(curriculum pattern) ஆங்கிலம், தமிழ், தென்மொழி, இந்தி, கணக்கு, விஞ்ஞானம், சரிதம், தரை நூல் இவற்றில் சரியான பாட திட் டம்-இவற்றை ஆராய்ந்து வெளியிட உட்குழுக்கள் அமைக்கப்பெற்றன. கல்வி மாநாட்டின்போது பேரவை யிலே தேர்வு நிகழும்போது, தேர் வினைச் சிக்கலில்லாமல் நிகழ்த்து வதற்கான விதிமுறைகளை வகுப்பதற் கும் ஒரு உட்குழு நியமிக்கப்பெற்றது. ஆசிரியர்க்கான நன்கொடை நிதி யைப் பெருக்குவதற்கும் நன்கு இயங் கச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப் பெற்றது. South Indian Teacher, பாலர் கல்வி இவற்றை நன்கு நடத் தும் வகைகளையும் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர்; செயலர் திரு T. S. ராஜகோபாலன் நன்றி நவிலக் கூட் டம் கலைந்தது.

செயலர் கடிதங்கள் – 1

சமூகத்திற்குத் தெள்ளமுதென விளங்கும் கல்வி அள்ளி வழங்கும் பெருந்தகையோர்களே, வணக்கம்.

நமது பணியையும் குறைகளையும் எடுத்தோதுவதற்குப் பயன்படும் "பாலர் கல்வி"யை நல்ல முறையிலே நடத்துவது நமது முதற் பணியாகும். இப் பத்திரிகையின் தரத்தையும் இதற்கான சந்தாவையும் அண்மை யிலே உயர்த்தியது யாவரும் அறிவர். பொருள் நஷ்டமில்லாமல் இதனை நடத்துவதற்குச் சந்தாதார்களின் எண்ணிக்கை மேலும் ஓங்கவேண்டும். துவக்கம்பள்ளிகள், நடுநிலைப்பள்ளி கள், உயர்நிலைப்பள்ளிகள் இவை பள்ளி ஒன்றுக்கு ஒருபிரதி வீதம் தவ ருமல் வாங்கக் கூடுமெனில், ஆயிரக் கணக்கிலே பிரதிகள் செலவாகும்; நஷ்டமில்லாமல் இப் பத்திரிகை இயங்கிவரும். இது பற்றி நண்பர் நன்கு முயலவேண்டும் என்பது முதல் வேண்டுகோள்.

பத்திரிகையின் உள்ளுரை (Con- tents) நன்கமைந்தால் தான், பத்திரி கைகளைப் பெருவாரியாக வாங்குவார் கள். இப்பத்திரிகையில் நமது குறை கள், தேவைகள் இவைபற்றி வெளி யிடுவதுடன், கல்வியின் வளர்ச்சிக் காகச் செயற்பாலனவான அரிய கருத் துக்களையும், பல பாடங்களிலே

கற்பிக்கும் வகையினையும் பிரசுரிக்கக் கூடுமாயின், ஆசிரியர் மிகப் பயன் பெறுவர். அநுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், கணிதம், விஞ்ஞானம், சரிதம், தரை நூல் இவற்றுள் முதல் ஐந்து படிவங்கள் வரையில் கற்பிக்கும் விஷயங்களையும் முறைகளையும் ஐந்தாறு கட்டுரைகள் அடங்கிய கோவையாக எழுதியனுப்பினால், இவர்கள் சமூகத்திற்கும், இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கும் பெரியதொரு தொண்டினைச் செய்பவராவர். இத்தகைய கட்டுரைகள் ஒரு கோவையாக வெளியிடப் பெற வேண்டில், தொடர்பு அறாமல் பிரசாரஞ் செய்யவேண்டும் ; கட்டுரைகள் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் நலம்.

நம்முடைய ஆசிரியர் சங்கத்திலே நன்கொடை நிதி (Teachers Benefit Fund) என்றியங்கி வருவதை யாவரும் நன்கறிவர். இதன் குறிக்கோள், நோயால் வருந்தும் ஆசிரியை ஆசிரியர்க்குச் சிறிதளவு நன்கொடை வழங்கலா மென்பதாகும். இந்நிதி, தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தில் இணைந்து இயங்கி வருகின்றது ; மாவட்ட ஆசிரியர் சங்கங்களிலும் இவ்வாறான கிளைச் சங்கங்கள் உள்ளன. இல்லாவிடில் முதன் முதலில் நிறுவுவது நமது கடமையேயாம். ஆண்டிற்கொரு முறை ஆசிரியர், ஆசிரியைகள் தவறாது தலைக்குக் கால் ரூபாய் வீதம் கொடுத்தால், இந்த நிதி அதிவிரைவில் மிகவும் பெருகிவிடும் ; ஆசியர்க்கு மருத்துவ வசதியோ, அவர்கள் நோயுற்ற காலத்தில் உதவியோ வேண்டுமெனில் இந்த நிதியிலிருந்து உதவி செய்ய இயலும். இது பற்றிய வசதிகள் முதலியனவற்றை ஆராய்ந்து South Indian Teacher இலும் பாலர் கல்வியிலும் வெளியிடத் தீர்மானஞ் செய்துள்ளோம். யாவரும் ஒத்துழைத்து இச்சீரிய நோக்கம் வெற்றியுறச் செய்யவேண்டுமென்பது எனது இரண்டாவது வேண்டுகோள்.

திரு. S. நடராஜன் அவர்களது பெரு முயற்சியால் நமது தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் கீழ் நூல் பிரசுராலயம் (S. I. T. U. Publications Ltd.) ஒன்றும், ஆராய்ச்சிக் குழு (S. I. T. U. Council of Educational Research) ஒன்றும், Junior Scientist வாரப் பத்திரிகையும், "ஸபேசன் பால விருந்தாவனம்" என்ற சிறு பள்ளியும் இயங்கி வருகின்றன. ஆசிரியரின் நலனுக்காக, ஆசிரியராகிய நம்மால் நடைபெற்றுவரும் இவற்றை மேன்மேலும் வளரச் செய்வது நமது கடமையே யாகும். இதுகாறும் வெளிவந்த பிரசுரங்கள் முதல் தரமானவை; பெரியோர்களால் போற்றப் பெற்றவை. இப்பிரசுரங்களை வாங்கி ஆதரவு அளித்தால் சமூகம் நலமுறுவதுடன், திரு. எஸ் நடராஜன் அவர்களது பெருமுயற்சி மிகப் பயன்பெற்று, ஊக்கம் பெருகி, இத்தகைய தொண்டு மேன்மேலும் பெருகும். இதற்கான பேருதவி செய்யவேண்டும் என்பது மூன்றாவது வேண்டுகோள்.

வணக்கம்.

T. S. ராஜகோபாலன்

ஆரம்பக் கல்விக்கான வசதிகள்

இடவசதி :

பெரும்பாலான ஆரம்பப் பள்ளிகள் சுகாதார முறையுடன் தக்க வசதி யின்றி இருந்து வருவது கண்கூடு. உதவி பெறும் ஆரம்பப் பள்ளி களுள் பல சாவடியிலும், மடங்களி லும், திண்ணைகளிலும் சுகாதாரத் திற்கு ஒவ்வாத கொஞ்ச உயரத்தைக் கொண்ட கூரைகளையுடைய சிறு கட்டி டங்களிலும் இருந்து வருகின்றன. இவற்றால் குழந்தைகளின் மனோ நிலை, தேகநிலை பாதிக்கப்படுவது இயற்கையே. இதை மறந்து கல்விக் கான எத்துணை சீர்திருத்தம் உருப் பெற்றாலும், அது உண்மைப் பயனைத் தராது என்பது திண்ணம். இது விஷயமாக உண்மையான நிலையைப் புரிந்துகொள்ள, தற்காலம் இயங்கி வரும் பள்ளிகளில் எத்தனை தகுதி யற்றவை என்பதை ஒவ்வொரு யூனி யனிலுமுள்ள ஒருபொறிவியல் வல்லு நருடன் ஓர் ஆசிரியர், ஓர் நிர்வாகி, உத்தியோகப் பற்றற்றவர்களிலிருவர் இவர்களைக் கொண்ட ஓர் கமிட்டி யமைத்து, ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று பார்வையிட்டு, பின் அவர் களைக்கொண்டு ஒரு அறிக்கை சமர்ப் பிக்க வேண்டினால் வளர்ச்சிக்குரிய வழியை நம்மால் அறிந்துகொள்ள முடியும்.

ஆசிரியருக்கானது :

சம்பளம் பெறும் முறையில் ஓர் மாபெரும் மாற்றம் அவசியம். உதவி பெறும் பாடசாலைகளில் வேலைசெய்து வரும் ஆசிரியர்கட்கு பிரதிமாதமும் 1-ந்தேதி சம்பளம் என்ற பிரகடனத் தின் கீழ் 1961 ஜனவரி முதல் ஆசிரி யர்கள் படும் கஷ்ட நஷ்டம் சொல் லத்தரமன்று. இம் முறையின் மூலம் பிரதி மாதமல்லாது, வருஷக் கடைசி யில்தான் (பிரதி வருஷத்திற்கும் final Teaching grant ஸாங்ஷன் செய்த பிறகுதான்) ஆசிரியர், நிர்வாகிகளு டன் தங்களது சம்பளக் கணக்கை முடித்துக்கொள்ள முடிகிறது என்பது நடைமுறை உண்மை. இதனால் ஆசிரியர்களின் மனோநிலையில் ஆசிரி யர் புரியும்வேலை எத்தகையதாயிருக்கு மென்பது நம் சிந்தனைக்குரியது. ஆகவே இம்முறை மாற்றப்படவேண் டியது தவிர்க்க முடியாதது. உண்மை யான காலண்டர் மாதத்திற்கு (1-ந் தேதி முதல் 30-ந்தேதி முடிய) சம்ப ளம் கணக்கிடும் முறையே சாலச்சிறந் தது. ஆசிரியர்களின் மனம் புத் துணர்ச்சி பெறுமென்பது தெளிவு. இதனால் கல்வியின் தரமும் விருத்தி யடைவது திண்ணம்.

ஒவ்வொரு ஊரிலும் படிக்கும் வயது டையவர்களின் எண்ணிக்கைக்குத் தக்க விகிதாசாரத்தில்தான் அவ்வூரி லுள்ள பள்ளிகளில் வேலை செய்து வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அமைவது சாலச் சிறந்தது; சிக்கனத் திற்குரியது. உதாரணமாக, சிற்றூர் களில் ஸென்ஸஸ்படி, படிக்கும் வயதுடைய குழந்தைகளின் எண் ணிக்கை 100 எனக்கொள்வோம். அப் பள்ளி ஒவ்வொன்றிலும் மூன்று ஆசிரியர்களாக மொத்தம் ஆறு ஆசிரி யர்கள் வேலை செய்து வருகின்றனர் ஆனால் ஆசிரியருக்கு 20 குழந்தைகள் என்ற விகிதாசாரப்படி ஐந்து ஆசிரி யர்களே இருந்து வரமுடியும். இத னைக் கொண்டால் ஒரு ஆசிரியருக் குரிய பணம் வீணாவதோடு, அவ்வாசி ரியர் எவ்விதம் வேலை செய்து வரு கிறார்? அவருக்கான குழந்தைகள் எங்கிருந்து கிடைத்தன என்பன வற்றை நாம் ஆழ்ந்து சிந்தனை செய்து, அலசிப் பார்த்துத் திட்ட வட்டமான ஓர் முடிவுக்கு வருவது மிக அவசியம்.

நிர்வாகம் :

சுதந்திர இந்தியாவில் பொதுப் பணம் செலவழிக்கப்படும் முறையில் மிக்கப் பொறுப்புணர்ச்சி ஒவ்வொரு வருக்கும் வேண்டற்பாலது. இதை Deposit in the State Bank அல்லது Landed property இவற்றில் ஏதேனு மொன்றை என்டௌமெண்டாக தமக்குச் சொந்தமாகப் பெருத பள்ளி கள் ஏராளம். அதோடு கூட பள்ளிகளை நிர்வகித்து வரும் நிர்வாகிகளில் ஒரு சிலரைத் தவிர அநேகர் தமது தின சரி வாழ்க்கைக்கு அதே பள்ளியிலோ அல்லது வேறு இடத்திலோ வேலை செய்துதான் ஆகவேண்டிய நிலையில் உள்ளனர் என்பது உண்மை. இப்படி யிருக்க மேற்கண்ட பொருளாதார வசதியைக் கொண்ட நபர் எவ்விதம், ஆசிரியர் க்ஷேம நிதிக்கான நிர்வாகி யினது பங்கைக் செவ்வனே செலுத்தி வர இயலும்? இதுகாறும் எவ்விதம் செலுத்தி வந்தார்? செலுத்தி வரு கிருர்? இவற்றைச் சிந்தித்து உடனடி யாக முடிவுக்கு வராத காலம் வரை கல்வியின் முன்னேற்றம், தரம் இவை எதிர் பார்த்த அளவுக்கு வர. இயலா தது இயற்கையே.

மேற்கண்ட விஷயங்களை மனதி லிறுத்தி ஓர் நீதிபதியைத் தலைவரா கக் கொண்ட, ஓர் ஆசிரியர், ஓர் நிர் வாகி, உத்தியோகப் பற்றற்ற இரு நபர் இவர்களடங்கிய ஓர் கமிட்டியை அரசாங்கம் நியமனம் செய்து, பள்ளி களின் தன்மையை நேரில் கண்டு சிறந்த சீர்திருத்தம் செய்வதுதான் பயன்தரத் தக்கது.

கடந்து மூன்று ஐந்தாண்டுத் திட் டங்களில் நிறைவேற்றப்பட்ட பணி கள் நன்முறையில் வளர்ச்சி பெறு கின்றனவா என்று ஆராய வேண்டு வதொன்று தான் நான்காவது ஐந் தாண்டுத் திட்டத்தின் நோக்க மாய மையவேண்டும். அரசாங்கம் மக்களது க்ஷேம நலத்தை விரும்பிச் செய்து வரும் முதலீடுகளில் கல்வியைப் பரப்புவதானது மிகவும் லாபகரமான குறுகிய காலத்திலல்லாது, நீண்ட காலத்தில் மிகச் சிறந்த ஆதாயம் தரும் தேசீய முதலீடு ஆகும்.

'வளர்க கல்வி'

(M. P. சுப்பிரமணியன்' கடையம்)

விஞ்ஞான பாடம் :

எளிய சாதனங்களைப் பயன்படுத்தல்

தண்ணீர் குடிக்க உதவும் தம்ளர் கள், மற்றும் கயிறு, ரப்பர்-நூல், ஆப்பிள் பழம், விளையாட்டு பலூன், மின்னிசை விசிறி இவை சாதாரண மான சாமான்கள்; ஆனல் கற்பனைத் திறனேடு கையாண்டால், விஞ்ஞா னம் கற்பிக்க இவை மிக அருமை யான கருவிகளாகி விடும்.

விஞ்ஞானப் பாடம் கற்பிக்க விலை உயர்ந்த பெரிய பெரிய சாதனங் களை விட்டு விட்டு, இந்தச் சாதாரண அன்ருடப் பொருள்களைப் பயன்படுத் திஞல் பெரும்பாலும் மாணவர்களுக்கு விஞ்ஞான வகுப்பில் ஆர்வம் வளரும்; ஆசிரியர்களும் தாங்கள் செய்து காட் டும் பரிசோதனையின் சாரத்தை மாண வர்கள் மனத்தில் நன்கு பதிய வைக் கக் கூடியவர்களாவார்கள்.

உலகில் தோன்றிய மாபெரும் விஞ்ஞானிகள் பலருடைய பெயர்கள் இன்றும் அழியாது விளங்கப் பெரி தும் காரணம், அவர்கள் தங்கள் விஞ்

ஞான மர்மங்களை விளக்கிக் காட்டப் பயன்படுத்திய மிகவும் எளிமையான வியக்கத்தக்க சாதனங்களே யாகும். 2000 ஆண்டுகளுக்கு முன்பு அலக் ஸாண்டிரியா நகரில் விஞ்ஞானி ஹெரால் என்பவர் ஜெட் விசையினல் இயங்கும் பொம்மை நீராவி இயந் திரம் ஒன்றைச் செய்து காட்டினர்; அந்தப் பொம்மைக் கருவிதான் இன் றும் நீராவி டர்பைன், வாயு டர்பைன் ஜெட் ஏவுகணை இயந்திரம் ஆகியவற் றின் விஞ்ஞானத் தத்துவத்தைக் கற் பிக்க உதவுகிறது. கலிலீயோ "பீஸா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தின்" மேலிருந்து சில பொருள்களைக் கீழே எறிந்த மிகச்சாதாரணமாகச் சோதனை மூலந்தான் தமது காலத்து விஞ்ஞா னச் சிந்தனையைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க உதவினர்.

ஆய்வுக்கூடக் குழாய்களுக்குப் பதில் ஜாம் புட்டிகள் அல்லது தம்ளர் களைப் பயன்படுத்தலாம்; சுருள் வில்லுகளுக்குப் பதில் ரப்பர் வளையங் களை உபயோகிக்கலாம்; அப்போது ஆசிரியர் செய்து காட்டும் பரிசோத னையில் மாணவர்களுக்கு அதிக ஆர்வம் பிறக்கும்; பரிசோதனையையும் எளிதாகச் செய்து முடிக்கலாம்; செல வும் குறையும். முக்கியமான பரிசோ தனைகளை மிகச் சிறப்பாகச் செய்து காட்டி விளக்கி வைக்கவேண்டு மானல், அவற்றின் அடிப்படையான விஞ்ஞானக் கருத்தை ஆசிரியர் நன்ருகச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

பழங்கள் கற்பிக்கும் பாடம்

இக் கட்டுரை ஆசிரியர் இரண்டா வது உலகப் போர்க் காலத்தில் இரா ணுவத்தில் சேர்வோர்க்கு விஞ்ஞானப் பாடம் கற்றுக் கொடுக்கக் கண்டு பிடித்த ஒரு புதிய சோதனை இதற் கோர் எடுத்துக் காட்டாகும். இரண்டு ஆப்பிள் பழங்கள் (இல்லாவிட்டால் ஆரஞ்சுப் பழங்கள், பேஸ்பால் பந்து கள், டென்னிஸ் பந்துகள், அல்லது சிறிய சோடா புட்டிகள்) மட்டுமே தேவை, இப் பரிசோதனைக்கு. இவை இரண்டையும் நீண்ட நல்ல நூல் களில் கட்டி, இரண்டு பழங்களுக்கும் இடையே ஓர் அங்குல இடைவெளி இருக்குமாறு இரண்டையும் நம் வாய்க்கு நேராகத் தொங்கவிடவேண் டும். இரண்டுக்கும் நடுவே நன்ருக வாயால் ஊதவும். என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்? "அவை இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று வில கும்" என்பார் அரைகுறை விஞ்ஞா னம் தெரிந்தவர். ஆனல் அவை இரண்டும் ஒன்ருேடொன்று முட்டிக் கொள்ளும்; அது ஏன்? ஆகாய விமா னம் பறப்பதேன்? பேஸ் பால் பந் தின் பாதை வளைவதேன்? பூச்சு வர் ணக் குழம்பும், பூச்சி கொல்லி மருந் தும், தெளிப்புக் கருவிகளில் புவி ஈர்ப்பு விசைக்கு எதிராக மேலேறு வதேன்? அதே காரணந்தான், ஆப்பில் பழங்கள் இரண்டும் முட்டிக் கொள்வதற்கும்.

பலூன் சொல்லும் கதை

இதே விஞ்ஞானத் தத்துவத்தை விளக்க இன்னெரு எளிய பரிசோ தனை; இதற்கு விளையாட்டு பலூன் ஒன்றும், சில "பேப்பர் கிளிப்புகளும்" ஒரு மின்விசை விசிறியுமே தேவை. முதலில் விசிறியையே மேலே பார்த் துத் திருப்பி வைத்து, விசையைத் தட்டிவிடுக. பின்னர், ஊதிய பலூனை விசிறியின் காற்ருேட்டத்தில் விடுக. (பலூன் கழுத்தில் போதிய பேப்பர் கிளிப்புகள் மாட்டப்பட்டிருக்கவேண் டும்; அப்பொழுதுதான் அதைக் காற்று நெடுந்தொலைவு அடித்துக் கொண்டு போகாமல் இருக்கும்). பலூன் மேலும் கீழும் குதிக்குமே ஒழிய, அந்த இடத்தைவிட்டு விலகி வெளியே போய்விட முடியாது. ஏனென்ருல், அதைச் சுற்றிலும் குறைவான அழுத்தம் உள்ள காற்று வேகமாகச் செல்கிறது. பலூன் அக் காற்ருேட்டத்தின் விளிம்புவரை செல் லும் போதெல்லாம், அதிக அழுத்தத்

தில் அசையாமல் இருக்கும் வாயு மண்டலக் காற்று அதை உள்ளே தள்ளிவிடுகிறது.

காற்றை அமுக்கலாம், தண்ணீரை அமுக்க முடியாது என்று காட்டுவதற்கு வேண்டியவை எல்லாம் தண்ணீரும் ஒரு புட்டியும், மை அடைக்கும் குழாயும், ஒரு கார்க்குமேயாகும். புட்டியில் தண்ணீர் ஊற்றி நிரப்புக. மை அடைக்கும் குழாய் தண்ணீரில் மிதக்கும் அளவுக்குச் சரியாய் அதில் தண்ணீரை இழுத்து வைக்க. பின்னர், இதை விளிம்பு வரை தண்ணீர் அடைத்த புட்டிக்குள் போட்டு, புட்டியைக்கார்க்கினுல் மூடுக. மை அடைப்பானில் உள்ள தண்ணீர் சரியான அளவில் இருக்குமானுல், கார்க்கைச் சிறிது அமுக்கினுல்போதும், உடனே மை அடைப்பான் கீழே தாழும்; கார்க்கைச் சற்று மேலே தூக்கினுல், அதுவும் மேலே வரும். ஏன் அவ்வாறு நடக்கிறது என்பதை, மாணவர் மை அடைப்பான் குழாயின் நீர் மட்டத்தைக் கூர்ந்து கவனித்தால், கண்டு பிடித்து விடுவார்.

கோவை 53வது இராச்சியக் கல்வி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

I. பொது

(a) இந்த மகாநாடு இந்தியாவின் மேல் சீனுவின் படை எடுப்பை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆக்ரமிப்பாளர்களை வெளியேற்ற யூனியன் அரசாங்கத்திற்கு தன் முழு ஆதரவையும் அளிக்க உறுதி கூறுகிறது.

(b) சீனப் படை எடுப்பில் தாய் நாட்டின் சேவைக்காக தம் உயிரைத் துறந்த இந்திய ஜவான்களுக்கு தன் அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவர்களது தன் நலமற்ற சேவையைப் பெரிதும் பாராட்டுகிறது.

(c) அரசாங்கத்தார் ஆசிரியர்களின் பஞ்சப்படியை உயர்த்தியதற்காக நன்றி கூறுகிறது.

II. வேலைஸ்திரமும் நிபந்தனைகளும்.

(a) உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் சேவை உறுதியையும் அவர்களுடைய உரிமைகளையும் காப்பாற்றுவதற்கு அவசியமான சட்டங்களை இயற்றவேண்டுமாய் இராச்சிய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

(b) ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குச் செல்லும் ஆசிரியர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பதில் அவர்களது Service Register-ல் குறிப்பிட்டுள்ளதையும் அனுசரிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது.

III. ஊதியமும் படியும்.

(a) ஆரம்பப்பள்ளி, உயர்தர ஆரம்பப்பள்ளி, நடுத்தரப்பள்ளி சகெண்டரி பள்ளி, பயிற்சிப்பள்ளி இவற்றின் தலைமை ஆசிரியர்களுக்கு ஒரேவிதமான சம்பளப்பட்டியல் ஏற்படுத்துமாறும் ஒவ்வொறு பள்ளியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையைப் பொருத்து அவர்களது duty அலவன்ஸை நிர்ணயிக்கப் பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

(b) போர்டுபள்ளிகள் உள்பட எல்லா விதமான பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு விட்டுவாடகைப் படி வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறது.

(c) 90-4-110-3-140 என்ற படியிலுள்ள சகெண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஜூனியர் பண்டிட்கள் இவர்களின் ஊதியத்தை 100-4-120-8-160 என்றும்

ஹையர்கிரேடு ஆசிரியர்களின் படியை 80-2-110 எனவும் உயர்த்துமாறு கோறுகிறது. மேலும் இப் புதிய படி 1-6-1960 முதலே அமுலாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.

IV. ஓய்வுபெறும் வயது,

(a) உபாத்தியாயர்கள் ஓய்வுபெறும் வயதை 55-இல் இருந்து 58-க்கு உயர்த்தியதற்காக இம்மகாநாடு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பதோடு, 1962-1963 ஆம் ஆண்டில் வேலையில் இருந்த எல்லா ஆசிரியர்களுக்கும் அவர்கள் 1-6-1962-க்கு முன்பு ஓய்வுபெற்றிருந்தாலும் கூட இந்தச் சலுகையை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

(b) மேலும் எல்லாப் பள்ளிகளிலும் இருக்கும் உபாத்தியாயர்கள் ஓய்வு பெறும் வயதை 60-க்கு உயர்த்துமாறும் அதற்கேற்றபடி M.E.R-ல் உள்ள விதிகளை மாற்றி அமைக்குமாறும் அரசாங்கத்தினரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

V. கஷ்டங்கள்.

(a) ஆசிரியர்களின் சேமிப்பு நிதியில் இருந்து (Provident Fund) அவர்கள் கடன் வாங்குவதற்கு இப்போதுள்ள விதிகளைச் சற்று தாராளமாக்கும்படியும்.

(b) உபாத்தியார்கள் ஓய்வுபெற்ற மூன்று மாதத்திற்குள் அவர்களுக்கு பென்ஷன் தொகை கிடைக்கும்படியும்.

(c) மத்திய அரசாங்க ஊழியர்கள் சேமிப்பு நிதியில் போடும் பணத்திற்கு அவர்களுக்குக் கிடைக்கும் அதே விதத்தில் உபாத்தியாயர்கள் சேமிப்பு நிதியில் போடும் பணத்திற்கும் வட்டி கொடுக்குமாறு அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

VI. ஆசிரியர்...மாணவர் விகிதம்.

(a) ஆசிரியர் மாணவர் விகிதம் சம்பந்தமாக தற்போதுள்ள 1:40 என்ற விதியை மாற்றி 1:20 என்று ஆக்கும்படி இம்மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது. தற்போதுள்ள விதிகளின்படி ஒரு ஆசிரியர் லீவு எடுத்துக் கொண்டால் அவருக்கு பதில் தற்காலிகமாக அந்தப் பதவியில் வேறு ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவது அனுமதிக்கப் படுவதில்லை.

ஆரம்பக் கல்வியின் அற்புத முன்னேற்றம்

(வி. பூ)

தமிழ் நாடு பல துறைகளில் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. கல்வித்துறையில் அது முன்னேறியிருக்கும் அளவில் வேறு இந்திய ராஜ்யங்கள் முன்னேறவில்லை என்றே சொல்லலாம்.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பென்ஷன், சேம நிதி, இன்ஷூரன்ஸ் என்ற முப்பெருங்காப்புகள் கொண்ட திட்டத்தை தமிழ் நாட்டு அரசாங்கம் தான் முதல் முதல் அமுலுக்குக் கொண்டு வந்தது.

ஆரம்ப ஆசிரியர்களின் பெரும்பணிகளைப் போற்றி அவர்களுக்கு ஊக்கம் அளித்தும் வருகிறது.

பள்ளிக்கூடம் இல்லாத கிராமமே தமிழ் நாட்டில் இல்லை என்ற நிலைமையையும் ஏற்படுத்தி உள்ளது.

இலவசக்கல்வி அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. பல லட்சம் சிறுவர்களுக்கு பள்ளிகளில் மதிய உணவு அளிக்க வகையையும் செய்துள்ளது; சீர் உடை திட்டமும் உள்ளது; சமூகத்தின் கூட்டுறவும் கிடைத்து வருகிறது.

மூன்றாவது திட்டம் முடிவடைவதற்குள் எல்லாச் சிறுவர்களும் பள்ளிகளில் சேர்ந்து கல்விபெறும் வாய்ப்பைப் பெறு

வர் என்றும் நம்பப்படுகிறது. கனம் கல்வி அமைச்சரும் அவ்வித நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்கள். நன்று.

கல்வித்துறை இயக்குநரின் ஊக்கமும் இடைவிடா உழைப்பும் ஆரம்பக் கல்வியின் அற்புதமான இம் முன்னேற்றத்திற்கு அடிப்படைகளாக விளங்குகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

கல்வித்துறை இயக்குநர் பெரிதும் விரும்புவது மற்றொண்டு உண்டு: அதாவது ‘பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் நன்றாகப் படித்து, மேல் வகுப்பிற்குச் சென்று கல்வியில் முன்னேற்றம் அடையவேண்டும்; ஒரு மாணவனாவது கல்வியில் தேர்ச்சி பெறாமல் பின் தங்கிவிடக்கூடாது’ என்ற எண்ணத்தை அவர் அடிக்கடி வெளியிட்டு வருகிறார்கள்.

இந்த எண்ணம் நன்மை தரக்கூடியது. ஆரம்பக் கல்விக்காகச் செலவாகும் பணமும் உழைப்பும் சிறந்த பயன் அளிக்க வேண்டும் என்றால், கல்விகற்கும் மாணவர்கள் அனைவருமே முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும். ஒரே வகுப்பில் மறு ஆண்டும் தங்கி மீண்டும் படித்ததையே படிக்கும் துர்பாக்கியம் பல மாணவர்களுக்கு ஏற்படுவதனால், அவர்களுக்காக செலவாகும் பணமும், ஆசிரியர் உழைப்பும் வீணாகின்ற நிலைமை உண்டாகிறது.

இவ்வித தேக்கத்தை ஒழிக்க முயல்வது மிகவும் புனிதமான பணி; அவசியமாக, உடனே செய்யவேண்டிய பணி, என்பது சொல்லாமலேயே விளங்கும். சிறிது சிந்திப்போர்க்குத்தான் அது எளிதில் விளங்கும்.

ஆரம்பக் கல்வியில் காணப்படும் தேக்கத்திற்குப் பல காரணங்கள் இருக்கலாம். வறுமை, வீட்டின் சூழ்நிலை, சமூக ஏற்றத்தாழ்வுகள். முதலிய தளைகளை அறுத்து எறிய அரசாங்கத்தார் ஆவன செய்து வருகிறார்கள்.

ஆசிரியர்களுக்கும் இந்தத் தேக்கம் பெரும் சோதனையாக இருக்கின்றது. திறமையும் தேர்மையும் உள்ள ஆசிரியர்கள் இவ்வித தேக்கத்தைத் தடுக்க வழிகாண விழைகின்றனர். கல்வியில் பின்தங்கிவிடும் குழந்தைகளைத் தனி முறையில் கவனித்து ஊக்கமளிக்கும் கடமையைச் செய்யவும் சித்தமாக இருக்கின்றார்கள்.

ஆனால் பள்ளியில் கல்வி முன்னேற்றத்திற்கு நன்மையளிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு பெருந்தடை உள்ளது. அதை நீக்கிவிட வேண்டும் என்ற உறுதி உண்டானால், கல்வித் தேக்கம் பெரும் அளவில் குறைந்துவிடும் என்பது உண்மை. அதற்கு மன உறுதி வேண்டும். ஒரு வகுப்பில் பல பிள்ளைகள் ஓராண்டு படித்தபின் ஒன்றும் கற்கவில்லை என்றால் அதற்குக் காரணம் தேடவேண்டாமா? அங்கு கற்கும் சூழ்நிலை இல்லை என்றுதான் தோன்றுகிறது.

ஒரு ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் வீதம் இருக்கவேண்டும் என்பது இப்போதுள்ள கல்வி விதி. 35 பிள்ளைகளுக்குமேல் 69 பிள்ளைகள் இருந்தாலும், அவ்வகுப்பிற்கு ஒரே ஆசிரியர்தான் இருக்கவேண்டும் என்பது நியதி.

இந்த விதியின் கோளாறுதான் கல்வித் தேக்கத்திற்குத் தனிப்பெரும் காரணம். 40, 50, 60, அல்லது 69 பிள்ளைகளை மடக்கி வைத்துக்கொண்டு எத்தகைய கல்வி போதிக்கமுடியும்? கற்பதற்கோ, கற்பிப்பதற்கோ அத்தகைய சூழ்நிலை இடந்தருமா? இது சிந்திக்கவேண்டிய விஷயம். பிள்ளைகளை மனத்தில் வைத்துக்கொண்டு சிந்திக்கவேண்டும்.

இதைப்பற்றி அதிகமாகச் சொல்லுவதில் பயனில்லை, சிந்தித்து அறியும் விஷயம் இது. வெறும் சொற்கள் பயன்படா.

ஆரம்பக் கல்விக்கு அரசினர் எவ்வளவோ செய்து வருகிறார்கள். இந்த ஒரு சிறு சீர்திருத்தம் செய்துவிடலாம். அதற்குக் கற்பனைசக்தி தேவை. உறுதி தேவை.

எவ்வளவோ கோடி பணம் செலவழித்துச் செய்யும் கல்விப்பணிக்கு நல்ல பலனை எதிர்பார்த்து இன்னும் சிறிது தொகையைச் செலவு செய்து நற்பயன் கிடைக்கச் செய்வது நல்ல வழியாகும் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. கல்வியின் தரம் உயர்ந்தால் சமூகம் மகிழ்ச்சியுடன் அதிக செலவை ஏற்கும். பொது மக்கள் கூட்டுறவும் கிடைக்கும்.

ஆகையால் சில ஆண்டுகளுக்குமுன் இருந்ததைப்போல் 20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தை உடனே செயல் முறைக்குக் கொண்டு வருவதே கல்வித் தேக்கத்தைத் தடுக்கும் பேர் உபாயமாகும்.

செகண்டரி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஒரு ஆசிரியருக்கு 20 க்கு மேல் பிள்ளைகள் வீதம் இருந்தாலும் கல்வித் தேக்கம் அதிகமாக உண்டாகாது. ஆனால் 5 முதல் 11 வயது வரையில் உள்ள சிறு பிள்ளைகள் நன்ருகக் கற்க வேண்டும் என்ருல் ஒரு ஆசிரியருக்கு 20 பிள்ளைகள் என்ற விகிதத்தை மீண்டும் அனுமதிப்பதே முறை.

தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த அற்புதமான கல்வி முன்னேற்றப்பணி பூர்த்தி அடைவதற்கு ஆசிரியர் - பிள்ளைகள் விகிதம் மாறவேண்டும்.

செலவு அதிகம் ஆகும் என்பது உண்மையே. இப்போது கல்வி செஸ்கூட வசூலிக்கப்படுகிறது. செய்யும் செலவிற்குப் பூர்ண பலன் கிடைக்கச் செய்வதே நல்ல முறையாகும், சிக்கனமுறையாகும். நாளடைவில் நன்மை தருவதாகும்.

திரு. ஜி. ஆர். தாமோதரன்



" ஜி. ஆர். டி. " என்ற இந்த மூன்று எழுத்துக்கள், தடைபடா ஊக்கம், தளர்விலா ஆக்கம், இடைவிடா உழைப்பு, இணையிலா ஆர்வம் ஆகியவற்றைக் குறிக்கும் சின்னமாகவும், தமிழகத்தின் இன்றைய முன்னணிக் கல்வித் துறை அறிஞர்களில் ஒருவரான திரு. ஜி. ஆர். தாமோதரன், எம். எல். சி. அவர்களைக் குறிப்பதாகவும் விளங்குகின்றது.

கோவையை அடுத்த பூளைமேட்டின் பழம்பெரும், 'பி. எஸ். ஜி.' என்னும் செல்வக் குடும்பத்தில், பி. எஸ். ஜி. அறநிலையத்தை நிறுவிய திவான் பகதூர் அரங்கசாமி நாயுடு அவர்களின் தலைமகனாராகத் தோன்றியவர் திரு. ஜி. ஆர். தாமோதரன்.

இவர் பூளைமேடு சர்வஜன உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்று, பின் சென்னையில் பட்டப் படிப்பு முடித்து, இங்கிலாந்து சென்று தொழிலியற் கல்வியில் மேற் படிப்புப் படித்துள்ளார். இவர், தாம் நிறுவித் திறம்பட நடத்திவரும் 'பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி' யின் முதல்வராக இருந்து வருகின்ருர்.

இவர் ஆசிரியராக இருந்து நடத்திவரும் "கலைக் கதிர்" தமிழகத்தின் பத்திரிகைத் துறையில் ஒரு கலங்கரை விளக்கமாக நின்று திகழ்வது நாடறிந்த தொன்ருகும். அதுமட்டுமின்றி பி. எஸ். ஜி. குடும்பத்திஞல் நடத்தப்பட்டுவரும் பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றைச் சிறப்பாகச் செயற்பட வழிகாட்டி வருகின்ருர்.

ஆசிரியர் சமுதாயத்தின் பேரன்பைப் பெற்றுள்ள இவர், கோவை மாவட்ட ஆசிரியர் பேரவையின் தலைவராகவும், தென்னிந்திய ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவராகவும், மேல்சபை உறுப்பினராகவும், மற்றும் பல்வேறு கல்விக் குழுக்களில் பொறுப்பான அங்கம் வகிப்பவராகவும் இருந்து, சீரிய கல்விப் பணி புரிந்து வருகின்ருர்.

திரு. ஜி. ஆர். டி., பி. எஸ். ஜி. குடும்பத்திற்கு மட்டுமேயன்றி, ஆசிரியத் துறைக்கே ஒரு நல்லணியாகத் திகழ்கின்ருர். இவர் நெடுங்காலம் உடல் நலத்தோடு வாழ்ந்து, ஆசிரியர் சமுதாயத்திற்கும், கல்வித் துறைக்கும் பெரும் பணிகளாற்றவல்ல ஆற்றலை நல்குமாறு இறையடி இறைஞ்சுகின்ருேம்.

எகோ (ECHO)

(ஜூன் மீ' வெளியீடு)

இருபதினுயிரம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் இல்லை

WCOTP உறுப்பினர்களுக்குக் காங்கோ விடுத்துள்ள வேண்டுகோள்

WCOTP செயற்குழு உறுப்பினருள் ஆப்பிரிக்காவின் பிரதிநிதி-யாய் உள்ள ஜோசப் இம்பென்ஸா-டுபி என்பவர், காங்கோ நாட்டு ஆசிரியர்-களுக்கு ஏற்பட்டுள்ள இணையற்ற துன்பநிலையை உலகமக்கள் அனைவரும் உணரும்படி செய்தல் வேண்டும் என்று WCOTP கிளைச்சங்கங்கள் எல்லாவற்றையும் வேண்டிக்கொண்டுள்ளார். காங்கோவில் உள்ள ஆசிரியர்களுள் மூன்றில் இரண்டு பங்கினருக்கு ஏறக்குறைய ஒன்பது மாதங்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று அவர் அறிவிக்கின்ருர். (சிலர் இருபத்தொரு மாதங்களாகச் சம்பளமே பெறவில்லை). இவற்றுள் பெரும்பாலனவற்றுள், மத்திய அரசாங்கம் ஆசிரியர்சம்பளத்-துக்கு என்று மாகாணங்களுக்காக ஒதுக்கிவைத்துள்ள தொகை மாகாண அதிகாரிகளால் வேறுதுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Central des Enseignants Congolais என்னும் WCOTP–இன் தேசீய உறுப்பு ஏப்ரல் 4-7-இல் லியோபோர்டுவில் என்னும் இடத்தில் சிறப்புக்கூட்டம்ஒன்றனைக் கூட்டிற்று. ஆங்கு வந்திருந்த பிரதிநிதிகள், ஆசிரியர்சம்பளம் கொடுக்கும் முறை ஒழுங்காக்கப்படாவிடின், மே பதினைந்திலிருந்து வேலைநிறுத்தம்செய்வது என்று முடிவுசெய்தனர்.

திரு. இம்பென்ஸா-டுபி, CEC–இன் தேசீயக் காரியதரிசி என்னும் முறையில் அக் கூட்டத்தில், துன்புறும் அவ்வாசிரியர்களின் சார்பாகப் பின்வருமாறு பேசினர் : "தம் தொழிலுக்கும் தம் நாட்டுக்குழந்தைகளுக்கும் தொண்டுசெய்யும் முறையில் காங்கோநாட்டு ஆசிரியர்கள் கொண்-டுள்ள விசுவாசம் வேறு எந்த நாட்டிலும் காண்டல் இயலாது. இவ்வாறு சம்பளமின்றி ஓராண்டுக்குமேல் (சில இடங்களில் இரண்டு ஆண்டுகளுக்-கும்) தம் தொழிலைத் தொடர்ந்து நடத்துகின்ற ஒருவர் வேறு எந்தத் தொழில்துறையிலும் — ஏன், தொழிலாளர்சங்கத்திலும்–இருப்பர் என்று எண்ணவும் முடியாது. இப் பயங்கர அநீதியினல் விளைந்துள்ள கஷ்டம், துக்கம், துர்த்தசை, குடும்பங்களின் அழிவு முதலியவற்றை ஒருவராலும் முழுதும் அறிந்துகொள்ளமுடியாது. அவ் வாசிரியர்கள் தங்கள் தொழிலில் கொண்டுள்ள சஞ்சலமற்ற பக்தியையும் விசுவாசத்தையும்குறித்து, அவர்களை அனைவரும் வணங்கி வாழ்த்துதல் வேண்டும்."

திரு. இம்பென்ஸா—டுபி, மே 3-இல் WCOTP ஸெகரெடரி-ஜெனரலுக்கு எழுதிய கடிதத்தில், மே 15-இல் தொடங்கப்பட இருக்கும் நியாய-மான வேலைநிறுத்தம் இரக்கமற்ற முறையில் அரசாங்கவதிகாரிகளால் தடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் அக் காரணத்தைக் காட்டி

WCOTP உறுப்பினர், ஐக்கிய நாடுகளில் உள்ள தம்தம் அரசாங்கத் தூதுவரின்மூலம், காங்கோநாட்டுத்தோழரின் சார்பாக, அதில் தலையிட்டு ஆவன செய்தல்வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இடமிருந்து வலம்: Syndicat national des Enseignants du Niger என்னுஞ் சங்கத்தைத் சார்ந்த மைனிகேப் இஸ்ஸா மோடி என்பவர் (WCOTP-இன் பிரதிநிதி); அச்சங்கத்தின் முன்னாள் ஸெகரெடரி-ஜெனரலாய் இருந்தவரும் இப்பொழுது காங்கோவிற்கு முதல் CAR (Central African Republic) தூதுவராகவும்உள்ள அகஸ்ட் இம்போ; ஆப்ரிகாவின் பிரதிநிதியாய் WCOTP-இல் செயற்குழு உறுப்பினராக இருப்பவரும் CEC தேசீயக்காரியதரிசியுமான ஜோஸப் இம் பென்ஸா, வியோ போர்டு வில்லில் நடைபெற்ற CEC காங்கிரஸுக்கு விஜயஞ்செய்தனர்.

அரபு ஆசிரியர்கள் :

WCOTP செகரெடரி-ஜெனரல் வில்லியம் G. கார் 'கெய்ரோ'வில் ஏப்ரல் 14-இல் ஐக்கிய அரபுக் குடியரசில் ஆசிரியர் 'சின்டிகே'டின் பொதுமகாநாட்டில் பேசியபொழுது, தேசீய ஸர்வதேசநிலைகளில் உள்ள ஆசிரியரனைவரும் வலிமையும் ஒற்றுமையும் உடையவராய் இருத்தல் வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

"வானவூர்திகள், கடல்தந்திகள், 'டெலிவிஷன்' என்பவை உலகத்தின் அளவைச் சுருக்கிவிட்டன; அதனால், இப் புதிய ஸகாப்தத்தில் வாழும் ஆசிரியர்கள், தம் தொழிலில் பரந்த மனப்பான்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் தாம் ஆசிரியராய் இருத்தலைக்குறித்துப் பெருமிதங்கொள்ளல்வேண்டும்; தேசீய நிலையில்மட்டுமன்றி, WCOTP-இன்மூலம் உலகநிலையிலும் உள்ள மக்கள் அனைவரும் நன்கு உணரும்படி, தம் அருமைபெருமைகளையும் குறைகளையும் ஏகோபித்த, தெளிவுள்ள, வன்மை மிக்க குரலில் எடுத்துக் கூறுதல் வேண்டும். இது போன்ற மகாநாடுகள், ஆசிரியர்களின் வலிமையை மிகுவிக்க, பரஸ்பர நேர்முகமான தொடர்பினைப் பெறும் வாய்ப்பினை அளிக்கின்றன"—என்று அவர் கூறினர்.

1948-இலிருந்து அரபுத்தோழருடன் WCOTP கொண்டிருந்த தொடர்புவரலாற்றை எடுத்துக்கூறும் வகையில், Dr. கார் "புகழ் பெற்ற அரபுஅறிஞர்ஒருவர் சென்ற ஆண்டில் ஸடாக்ஹோமில் நடைபெற்ற WCOTP-இன் பிரதிநிதிகள் கூடிய மகாநாட்டில் முதன்முதல் அரபு-மொழியில் சொற்பொழிவாற்றினர். ஸ்டாக் ஹோமுக்கு வந்திருந்த அரபுப்-பிரதிநிதிகள் உலகவாசிரியர்களுக்கிடையே இன்னும் நெருங்கிய கூட்டுறவு இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்திக் கூறியதன் பயனுக, அவ்வுயர்-கொள்கையைக் கடைப்பிடிக்கும் முறையில் இன்று நான் உங்கள் முன்னிலையில் நிற்கின்றேன் "—என்று அவர் அரபுஆசிரியர்களுக்கு கூறினர்.

Dr. கார் அந்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது U A.R. உபதலைவர், கல்வியமைச்சர், அரபு ஆசிரியர் சங்கத்தின் செகரெடரி-ஜெனரலான மகமது S. எல் எரியன் ஆகிய மூவரோடும் கலந்து பேசினர்.

Dr. கார் U.A.R. ஆசிரியரின் 'சின்டிகே'டின் தற்கால அலுவலக-மாளிகைக்கு விஜயஞ்செய்தார். எல்போக் ஹோட்டல் என்னும் கண்கவரும் அக் கட்டிடம் இனி அண்மையில் அந்த 'சின்டி கே'டின் தலைமைக்காரி-யாலயமாக விளங்கும். பின்னர், அவர் ஆசிரியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் மருத்துவத்தொண்டுபுரிதற்காக அமைக்கப்பட்ட—80 படுக்கையுள்ள - மருத்துவநிலையத்தையும் பார்வையிட்டார். பின்னர், ஈராக் கல்வியமைச்சரும் அந்நாட்டு ஆசிரியர் 'சின்டிகே'டின் தலைவருமான அறிஞரோடும் மற்றைய அரபு நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிக-ளோடும் நெடுநேரம் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தார்.

அமெரிக்காஸ்.........

WCOTP இன் தேசீய உறுப்பான U.S.A.-இலுள்ள N.E.A. (The National Educatian Association) சங்கத்தின் வருஷாந்திரக்கூட்டம் 'மிஷிக'னிலுள்ள டெட்ராயிட் என்னும் நகரில், ஜூன் 30 முதல் ஜூலை 5-வரை கூடும். இந்த நூற்றொன்ருவது வருஷாந்திரமகாநாட்டுக்குப் பதினென்ருயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கல்விநிர்வாகிகளும் விஜயஞ்செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. "பெருமை மிக்க தொழில்-நாமே தேர்ந்தெடுத்துக்கொண்டது" என்னும் பொருளே இம்மகாநாட்டில் எடுத்துக்கொள்ளப்போகும் விஷயம்.

உலகஸம்மேளனத்தின் திட்டத்தையும் செயல்களையும் மேலெழுந்த-வாரியாகக் குறிக்கும் பகுதியொன்று, டெட்ராயிட் மகாநாட்டிலும், ஆண்டு-முழுதும் கூடும் N.E.A. சங்கத்தின் பெருங்கூட்டங்களிலும் விளம்பரப் படுத்தப்படும்.

பிரேஸில்நாட்டுக் கல்வியமைச்சரான டியோடோனியோ மாண்டிரோ டிபாரோஸ் என்பவர், "பிரேஸில்நாட்டுக்கல்வித்திட்டங்களில் தொழிற்-கல்விக்கும் சிறப்புக்கல்விக்கும் முதலிடம் தந்து தனிச்சலுகை காட்டல் வேண்டும். இதுவரை வாதவிவாதச்சொற்போட்டிகளுக்கு விஷயமா யிருந்துவந்த பல புதிய விஞ்ஞானச்சிறப்புத்துறை முன்னேற்றங்களை அனுபவத்தில் கையாளுதல் வேண்டும். புதிய ஆராய்ச்சிக்கூடங்களை

(Research laboratories) நிறுவி, தற்கால விஞ்ஞானமுறையும் உள்விவரமும் கைத்தொழில் பயிர்த்தொழில் கால்நடைபாதுகாப்பு இவற்றுக்குப் பயன்படும் முறையில், பெரிய தேசீய விஞ்ஞானக்கழகங்களில் தனிச்-சிறப்புள்ள திட்டங்களை வகுத்து வளர்த்தல் வேண்டும். இந்நாட்டு அரசியல் கல்வித்துறைப்பகுதியார் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு நாட்டுத் தலைவர், பிறதுறை அரசியலாளர், பெருங்கைத்தொழில்முதலாளிகள் தேசீய இளைஞர்சங்கங்கள் இவற்றின் ஆதரவு கிடைக்கப்பெறுகின்றது.



ICET-இன் உத்யோகஸ்தர் மூவர் WCOTP-இன் தேசீய உறுப்பான N.E.A.-இன் (U.S.A.) தலைமைக்காரியலாயமாளிகையில் போன மாதம் 'கவுன்சில்' விஷயங்களைப்பற்றிக் கலந்தாலோசித்தனர். இடமிருந்து வலம்: அமெரிக்காஸின் பிரதேசக்காரியதரிசியும் பொக்கிஷதாருமாகிய E.C. போம்ராய்; அமைச்சர்—பொக்கிஷதாரரான டேவிட் ஜான்ஸ்டன்; தலைவர் வில்லியம் T. ஹாகெர்டி.

WCOTP-இன் பிரசுரநிலையத்தாரால் 'பிரேஸில்' நாட்டு ஸாலோ பௌலோ என்னும் நகரில் அச்சிட்டு வெளியிடப்படும் புதிய 'எகோ' பத்திரிகையைப்பற்றித் திருப்திகரமான பாராட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. பல்கலைக்கழகப்பேராசிரியர்களும் ஆசிரியர்களும், அப் பத்திரிகை உலகத்தின் பிற பகுதிகளிலுள்ள தோழரோடு செய்திப்போக்குவரத்து வைத்துக்கொள்வதற்குக் கருவியாய் இருப்பதைப்பற்றிப் பாராட்டி எழுதியுள்ளனர்.

பரானுவிலிருந்து தலைமையாசிரியையொருவர் எழுதுவது வருமாறு: "மனிதவுரிமைகளையும் சிறப்பாக ஆசிரியத்தொழிலையும் அழித்தற்கு வேலைசெய்யும் அழிப்புச்சக்திகள் இருக்கச்செய்தேயும், உலகத்திலுள்ள கல்வித்தலைவர்களிடையே காணப்படும் பரஸ்பரமதிப்பினையும் ஒற்றுமை-யையுங்குறித்து என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். உங்கள் பிரசுரத்துக்கு நானும் சந்தாதார் ஆக விரும்புகினறேன்."

ம ா ்வாறு இன்னுஞ்சிலரும் WCOTP-இன் உலகத்திட்டத்தில் அக்க கூறினு ஆதரவும் காட்டி, தாம் எவ்வாறு ஒத்துழைத்து உதவலாம்

என்றும் கேட்டு எழுதியுள்ளனர். ஸாவோ பௌலோ நகரிலுள்ள பேராசிரியர் ஒருவர், "இந்தக் காலத்தில் எவரும் தனித்துப் பிரிந்து வாழ்தல் என்பது இயலாத காரியம். எல்லா மக்களுடைய பொதுநன்மையையும் இன்பத்தையும் வளர்க்க, ஒவ்வொருவரும் பிறரோடு ஒத்துழைத்தல் வேண்டும்" என்று எழுதியுள்ளார்.

பொலிவியா நாட்டு மக்களின் எழுதப்படிக்கத் தெரியாக்குறையை விரைந்து நீக்குதற்கென்று அந்நாட்டு மாகாணங்களாகிய லாபாஸ் ஸாண்டாகிரஸ் என்னும் இடங்களில் வாழும் இளைஞரால் தீவிர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கம் ஏப்ரல் மாதத்தில் , "ஒவ்வொரு வீடும் பாடசாலையே", 'எழுதப்படிக்கத் தெரியாத ஒவ்வொருவருக்கும் கற்பிக்கத் தன்னிச்சையாக முன்வரும் ஆசிரியர்' என்னும் பொருள் பொதிந்த இவ்விரண்டு கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு தொடங்கப்பெற்றது. "அறியாமையினின்று விடுவிக்கச் செய்யும் இப்பெரும்போருக்கு" ஆதரவு திரட்ட, அவ்விரண்டு மாகாணங்களிலும் இளைஞர் அணிஅணியாகச் சுற்றுப்பிரயாணம் செய்துவருகின்றனர்.

1962-இல் அரசாங்கத்தாரால் தொடங்கப்பெற்ற புதிய பத்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், 1971-ஆம் ஆண்டு முடிவதற்குள் எழுதப்படிக்கத்தெரியாக்குறையை முழுதும் தீர்த்துவிட-ல் வேண்டும் என்பதே ஆகும். இன்று அந் நாட்டு மக்களுள் பத்தில் ஏழு-பகுதியினருக்கு எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது; இதிலிருந்து அக் குறிக்கோளை அடைய, நாட்டுப்புறங்களில் உள்ள 1,250,000 முதியோருக்கும் நகரங்களிலுள்ள 350,000 முதியோருக்கும் அடுத்த எட்டாண்டுக் காலத்தில் எழுத்துக்கற்பிக்கவேண்டும் என்பது அறியப்படுதல் வேண்டும். இவ்வுயரிய திட்டத்தை நடத்த, அரசாங்கம் தேசீயவரவுசெலவுத்திட்டத்தில் இருபது சதவிகிதம் ஒதுக்கிவைத்துள்ளது

ரியோ-நகரில் கூடும் WOCTP மகாநாடுகள் :

ஆகஸ்டு மாதத்தில் ரியோ டி ஜெனிரோ என்னுமிடத்தில் WCOTP-இன் பிரதிநிதிகளின் மகாசபை கூடுதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்யவும், WCOTP-க்கும் ஆசிரியர்சங்கங்களுக்கும் இடையே இன்னும் நெருங்கிய தொடர்பினை வளர்க்கவும், உதவி செகரெடரி-ஜெனரலான ஜான் M. தாம்ஸன் என்பார், மே 4 முதல் 13 வரை ட்ரினிடாட், பிரேஸில், வெனிஸீலா என்னும் இடங்களுக்கு விஜயஞ்செய்தார்; 'வெனிஸீலா'விலுள்ள காரகஸ் என்னுமிடத்தில் Confederacion de Educadores Americanos என்னுஞ் சங்கத்தின் செகரெடரி-ஜெனரலான ஃபெலிக்ஸ் ஆடம் என்னும் அறிஞரோடு கலந்து ஆலோசித்தார். அதன் பிரதேசக்கூட்டமும், ஜூன்மாத இறுதியில், ரியோ டி ஜெனிரோவில் கூடும்.

ICET [The International Council on Education for Teaching] தன் 1963-ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டத்தைப் 'பிரேஸி'லில் உள்ள ரியோடி ஜெனிரோ நகரில் ஹோட்டல் க்ளோரியா என்னுமிடத்தில் கூட்டும். "வருங்கால ஆசிரியர்களைத் தயாரித்தல்"—என்பது அக் கூட்டத்தில் ஆராயப்போகும் பொருள்.

ICET செயற்குழுஅங்கத்தினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர்சிலரால் ஆராயப்பட இருக்கும் போதனுமுறைப்பகுதி, தொழிலில் ஈடுபட்டிருப்போருக்குக் கற்பிக்கும் முறை என்பதே ஆகும். ICET செயற்குழுஉறுப்பினரும் WCOTP-இன் உபதலைவருமான திரு. S. நடராஜன் (இந்தியா) அக் கூட்டத்துக்குத் தலைவராயிருந்து (Moderator) நடத்துமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கின்றார்.

புதிய போதனுமுறைகள், கற்பிப்பதற்குரிய புதிய கருவிகள், ஆசிரியர்கல்விக்குரிய அவற்றின் கருத்துக்கள் என்பவை அங்கு விவாதிக்கப்பட இருக்கும் விஷயங்களுள் சில ஆகும். கேட்டுக்கண்டு அறியுங்கல்வி-முறைக்காக அமைக்கப்பட்ட WCOTP புதிய கமிட்டியின் காரியதரிசியும் (U. S. A.) N. E. A.-இன் கேட்டுக்கண்டு அறியும் கல்வித்துறையின் (Audio - visual Instruction) நிர்வாகக்காரியதரிசியுமான அன்ன ஹையர் என்பவர் இவ்விஷயங்களைக்குறித்து ICET பிரதிநிதிகளுக்கு உபந்யாசம் செய்வார்.

ICET தலைவரான வில்லியம் J. ஹாகர்டி என்பவர் அப்பொழுது அஸெம்பிளிக்கூட்டங்களில் தலைமைவகிப்பார்.

ICHPER [The International Council on Health, Physical Education and Recreation] என்னுஞ் சங்கத்தின் ஆரும் காங்கிரஸின் தொடக்கநாளில், பிரேஸில்நாட்டுக் கல்வியமைச்சரான டியோ டோனியோ மாண்டிரோ டி பரோஸ் என்பவர் உபந்யாசம்செய்வார்.

ரியோ டி ஜெனிரோவில் உள்ள Universidade do Brasil-ஐச் சார்ந்தவரான Dr, கார்லோஸ் S. க்விராஸ் என்பவர் மற்ருெரு நாள் உபந்யாசம்செய்வார்; சுகாதாரம், உடற்பயிற்சிக்கல்வி, பொழுதுபோக்கு என்பவற்றைப்பற்றி நன்கு கற்பிப்பதற்கு இருக்கவேண்டிய மனேதத்துவ நிலைகள்''—என்னும் பொருள்பற்றி அவர் பேசுவார்.

ICHPER மகாநாடு, WGOTP பன்னிரண்டாம் மகாநாடு முடிந்த-வுடன், ஆகஸ்டு 14-17 தேதிகளில் ரியோ டி ஜெனிரோ நகரிலுள்ள ஹோட்டல் க்ளோரியா என்னுமிடத்தில் கூட்டப்பெறும்.

ICHPER பிரதிநிதிகள் லத்தீன் அமெரிக்காவிலுள்ள தம் தோழர்கள் வகுத்துள்ள ஆசிரியத்துறைத்திட்டங்களை நேரில் கேட்டுத் தெரிந்து-கொள்வதற்குப் பல்வேறு வாய்ப்புக்களைப் பெறுவர். ICHPER காங்கிரஸ் 'ஆர்கனைஸிங்' கமிட்டியின் தலைவரும் Universidade do Brasil Escola Nacional de Educacao Fisica a Desportos என்னுஞ் சங்கத்துக்கு 'டைரக்ட'ருமான Dr. வால்ட்மார் ஹரினே என்பவர், 'லத்தீன்அமெரிக்க நாடுகளில் உள்ள உடற்பயிற்சிக்கல்வி' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

உடற்பயிற்சிக்கல்விவகைகளையும் விளையாட்டுவகைகளையும் அக் காங்கிரஸில் செய்துகாட்டுதற்கென்று வேறுவேறு இரண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. Dr. ஹரினே நடத்திவரும் பள்ளிக்கூடத்துக்கும் படைவீரர்உடற்பயிற்சிக்கலைக்கூடத்திற்கும் அறிஞர்பலர் விஜயஞ்செய்வர்.

[WCOTP, ICHPER, ICET—என்னும் மூன்று சங்கங்களும் ஆகஸ்டு 14–இல் சேர்ந்து நடத்த இருக்கும் சுகாதாரக் கல்விக்கருத்தரங் கினைப்பற்றிய செய்திகள் 1963 மார்ச்சில் வெளிவந்த எகோ பத்திரிகையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.]

x x x x

ஸர்வதேசச்செய்திகள் :

பாரிஸ்நகரில் ஜூலை முதல்தேதியன்று கல்வித்திட்டத்தைப்பற்றி ஆராய்வதற்கு அமைத்த ஸர்வதேசக்கழகமொன்று (The International Institute for Educational Planning) வேலைசெய்யத் தொடங்கும். அதன் பயனாக மிக விரைவில் ஸர்வதேசநிலையில் புதுமுறைத்தொழிற்பயிற்சியைப் பெற்றோர் தோன்றுவர்.

UNESCO-வின் உறுப்புநாடுகள் தாம் மேற்கொள்ள உறுதிபூண்ட பேரளவு வளர்ச்சித்திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமாயின், கல்வித் துறையிலும் பொருளியலிலும் அசாதாரண ஆற்றலைப் பெற்ற அறிஞர்—கல்வித்திட்டத்தில் சிறப்புப்பயிற்சியைப் பெற்றோர்—அவசியம் வேண்டும் என்னும் உண்மை சிறிது காலமாக UNESCO–வுக்குப் புலப் பட்டுவருகின்றது. அதன் பயனாக IIEP நிறுவப்பட்டது. UNESCO பன்னிரண்டாம் பொதுமகாநாடு இதனைத் தொடக்கிவைத்தது, இது ஸர்வ சுதந்திர நிர்வாகவுரிமை உடையது ; ஆயின், சட்டப்படி UNESCO-வுக்குக் கட்டுப்பட்டது;

அக் கழகத்துக்கு 'டைரக்டர்'கள் பதினொருவர் உள்ள ஒரு குழு உண்டு. அவர்களுள் ஐவர் ஐ. நா. சங்கத்தின் உறுப்பினராவர் [Ex-officio members]. UN ஸெக்ரெடரி-ஜெனரலும் UNESCO 'டைரெக்டர்-ஜெனர' லும் உலகவங்கியின் தலைவரும் (The President of the World Bank) இன்னும் இருவரும் அவ் ஐவர் ஆவர். இவ்விருவருள் ஒருவர் ILO, FAO WHO இம் மூன்றனுள் ஒன்றிலிருந்து அனுப்பப்படுவர் ; மற்றொருவர், மூன்று தேசீயத் திட்டத்தொகுதிகளிலிருந்து அனுப்பப்படுவர். பின்னே கூறப்பட்ட இருவரும் மாறிமாறி அங்கத்தினராயிருப்பர். மற்றையோர் அறுவரும் அசாதாரண ஆற்றலைப் பெற்ற அறிஞர்களுள் தெரிந்தெடுக் கப்படுவர். அவர்கள் பெரிய பூகோள நிலப்பகுதிகளின் பிரதிநிதிகளாய் இருப்பர்.

அக் கழகத்தின் காரியாலயத்துக்கு 'டைரக்ட'ராய்த் தலைமைவகிப்ப வர் பிலிம் H. கூம்ஸ். அதில் அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்பன்னிரு வர் இருப்பர். அவர்கள் கல்வியிலும் பல வகைத் தேசீயத் திட்டங்களிலும் பரந்த அறிவு பெற்றவர்களாவர். குறைந்த அநுபவம் உள்ள உத்தியோ கஸ்தர்களும் அங்கு உளர். இவர்களே முடிவாக இப் பொதுத்துறைக்-கல்வித்திட்டங்களை வகுப்போருள் முதல்வராவர். அன்றியும், அக் காரியால யத்தில் முதிர்ந்த அனுபவம்பெற்றோர் அடங்கிய ஆராய்ச்சிக்கூட்டத் தாரும் உளர் . இவர்களே முடிவில் தம் தேசீயக் கல்வித்திட்டங்களை நடத்துதற்குப் பொறுப்புள்ளவராவர்.

திரு. கூம்ஸ் என்னும் அவ்வறிஞர் U. S.-இல் கல்விப்பண்பாட்டுத் துறையின் 'உதவி ஸெக்ரெடரி ஆவ் ஸ்டேட்' என்னும் பதவியை வகித்தவர்; கல்விவளர்ச்சிக்கென்று ஃபோர்டு நிறுவிய பொருள்நிலையத்துக்கு [Ford Foundation Fund] காரியதரிசியாயும் [1952-61] வாஷிங்டன் D. C-யில் உள்ள உயர்கல்வியாராய்ச்சிக்கென்று அமைக்கப்பட்ட நிலையமாகிய ப்ரூகிங்ஸ் இன்ஸ்டிட்யூஷனுக்கு யோசனை கூறும் நிபுணராயும் இருந்தவர்.

திரு. கூம்ஸ் இப் புதுப்பதவியை மேமீ முதல்தேதியில் ஏற்பதற்கு முன்னர், NEA-காரியாலயத்தில் கற்றோர்பலர்முன்னிலையில் ஓர் உபந்யாசம் செய்தார்; சென்ற இரண்டு ஆண்டுகளாக, அரசாங்கங்களும் ஸர்வதேச ஏஜன்ஸிகளும் கல்வித்திட்டத்தைக்குறித்து அதிகக்கவனஞ் செலுத்துகின்றன. ஒரு நாட்டின் மிக முக்கியமான தனிச்செல்வம் அந்நாட்டுக்குடிகளே என்பது இப்பொழுது உணரப்பட்டுவருகிறது. UN ஏஜன்ஸிகளும் பொருள்நிலையங்களும் இதுவரை சிறப்புத்தொழிற்-கல்விக்கே கடனளித்து உதவிவந்தன. ஆயின், இனிக் கல்விவளர்ச்சிக்குக் கடனுதவியைப் பெறுதல் முன்னிலும் எளிது. இனி வரும் பத்தாண்டுக் காலத்தில், கோடிக்கணக்கான 'டாலர்', கல்வியில் அநுபவத்திட்டங்களை வகுத்து ஆராய்ச்சிசெய்தற்குச் செலவிடப்படும்......பல நாடுகளில் இத்தகைய திட்டங்கள் தொடக்கநிலையிலேயே உள்ளன"—என்று கூறினர். ஆயின், இத் தலைசிறந்த குறிக்கோள்களை அடையும் முறை யாது?—என்னும் வினவுக்கு விடைகாணவே IIEP நிறுவப்பட்டுளது. இதனையே கல்வித்திட்டத்தின் 'சிக்கல்பகுதி' ('grey area') என்று திரு. கூம்ஸ் கூறுகிறார். பாரிஸ் நகரில் உள்ள இப் புதுக்கழகத்தில் நடைபெறவிருக்கும் பணியாலும் ஆராய்ச்சியாலும் அப்பகுதி உருவமும் தோற்றமும் பெறும்.

ரியோ டி ஜனீரோ என்னும் இடத்தில் 'குடும்பத்தினர்சங்கங்களின் ஸர்வதேச ஸமஷ்டி' (The Inernational Union of Family Organization) என்னுஞ் சங்கம் கூட்டும் மகாநாட்டில், "வானவெளியாராய்ச்சிக்காலத்தில் குடும்பங்களின் நிலை (Families in the Space-Age)—"மாறிக்கொண்டேயிருக்கும் உலகில் குடும்பநலன்களுக்குரிய நிலைமை"—என்னும் பொருள்-பற்றிய பல்வேறு பகுதிகளும் ஆராய்ந்து விவாதிக்கப்படும். "குடும்பவுறவும் தற்காலக் கல்விப்பிரச்சினைகளும்"—என்னும் பொருள்பற்றி விவாதிக்க ஒரு நாள் ஒதுக்கப்படும்.

அக் கூட்டங்கள் ஜூலை மீ 21-27 நாட்களில் நடைபெறும். உலகெங்கும் உள்ள குடும்பங்கள், அரசாங்கங்கள், ஸர்வதேசச்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அவற்றினுக்கு விஜயஞ்செய்வர். இம் மகாநாட்டைப்பற்றி மேலும் அறிய விரும்புவோர், IUFO General Secretariat 28, Place Saint Georges, Paris, France—என்னும் முகவரிக்கு எழுதிக்-கொள்க.



WCOTP Guide for Organizing National, Branch and Local Seminars—என்னுஞ் சிறுநூல், 'WCOTP Dakar Seminar Report' என்னும் அறிக்கையின் பகுதியாக முதன்முதல் வெளியிடப்பட்டது. ஆசிரியர்-சங்கங்களின் தலைவர்களுக்கு உரிய பயிற்சிக்கென்று கருத்தரங்குகளை நடத்துதற்குப் பல நிலைகளிலும் உள்ள ஆசிரியர் சங்கங்களுக்கு வழிகாட்டியாய் விளங்கும் இச் சிறுநூல், பிரெஞ்சுமொழியிலும் ஆங்கிலமொழியிலும் அச்சிடப்பட்டுள்ளது. இதனை WCOTP-இன் தலைமைக்காரியலாயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

x x x x

ஆஃபிரிகா:

லைபீரியா நாட்டுத் தேசீய ஆசிரியர்சங்கத்தின் நிர்வாகக்காரியதரிசியாகிய ஆல்பர்ட் போர்ட் என்பவர் மன்ரோவியா நகரசபைத்தலைவரான மேன்மை தங்கிய நாதன்ராஸ் என்பவரோடு, தேசீயகல்விவாரத்தை ஒட்டி விழாக்கொண்டாடும் முறையைக்குறித்துக் கலந்து உரையர்டுகின்றனர். மன்ரோவியா நகரில் 1962-ஜூனில், சுகாதாரத்தைப்பற்றியும் உடற்பயிற்சிக்கல்வியைப்பற்றியும் ஆதாய்தற்கென்று கூடிய அகில ஆஃபிரிகமகாநாட்டைப்பற்றிய WCOPT-இன் அறிக்கைப்பிரதியொன்றை மேயர் ராஸ் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றார்.

1962 நவம்பர் 25–முதல் டிசம்பர் 2–வரை லைபீரியா நாட்டில் கல்வி-வாரம் கொண்டாடப்பட்டது. அதற்கு உரிய பொருள், தேசீய முன்னேற்றத்துக்கு உரிய கல்வி என்பது ஆகும். அப்பொழுது அந்நாட்டு மக்களிடத்தில் அக்கறையும் ஒற்றுமையும் காணப்பட்டன. லைபீரியா நாட்டு NTA-சங்கத்தின் ஸ்தாபகத்தலைவரான ஓரா M. ஹார்டன் என்னும் பெண்மணியார் கோபன்ஹேகன் நகரில் கூடிய முதல் WCOTP மகாநாட்டுக்கு விஜயஞ்செய்து திரும்பிவந்த வருஷமாகிய 1952–முதல் இத் தேசீயக் கல்விவாரம் அந்நாட்டில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவருகின்றது.

சமயத்துறை, ரேடியோ, பத்திரிகை, கல்வித்துறை, பிற அரசியல்-துறைகள், அரசியல்அதிகாரிகள், லைபீரியா வணிகர்சங்கம், லைபீரியா நாட்டிலுள்ள அமைதிச்சங்கத்தின் (Peace Corps) பிரதிநிதிகள், லைபீரியா-வில் உள்ள சர்வதேசவளர்ச்சிக்கென்று நிறுவப்பட்ட யு. எஸ். ஏஜன்ஸி, கல்லூரித்தலைவர் பலர், ஆசிரியர்கள், மாணக்கர்—என்று இவ்வாறு நாட்டின் பல துறைகளிலும் உள்ள அனைவரும், இவ்வாண்டுக் கல்விவாரக் கொண்டாட்டம் வெற்றியோடு முடிவதற்கு, வேண்டிய உதவியைச் செய்தனர்.

இதன் தொடக்கவிழா நகரமாளிகையில் (City Hall) நடைபெற்றது. அப்பொழுது அந் நாட்டுப் 'பிரஸிடென்'டின் சார்பாக, 'ஸெக்ரெடரி--ஆவ்-ஸ்டேட்' உபந்யாஸம் செய்தார்.

அவ் வாரத்தில் பலவகையான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அத் தலைநகரின் வீதிகளில், மூன்று பள்ளிக்கூட இசைக்கருவிகளுடன் (School-bands), மக்கள் அணிவகுத்துச் சென்றனர்; பள்ளிக்கூடப் பொருட்காட்சி-யொன்றும், குழந்தைகளுக்கான திரைப்படம் ஒன்றும், அவ்வாரக் கல்வி-விஷயத்தைக்குறித்துப் புகழ்மிக்க கற்ருேர் பலர் நாள்தோறும் பேசிய ரேடியோப்பேச்சுகளும் நடைபெற்றன. அவ் வாரத்தின் ஞாபகார்த்தமாகச் சிறுநூல்ஒன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது; "தேசீயமுன்னேற்றத்துக்கு உரிய கல்வி"—என்னும் பொருள்பற்றி பல்வேறு மதசபைகளில் பிரசங்-கங்கள் நிகழ்த்தப்பெற்றன; "தேசமுன்னேற்றத்துக்கு வேண்டிய குடும்பத்தினர்கூட்டுறவு"—என்னும் பொருள்பற்றி அறிஞர்சிலர் ரேடியோமூலம் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்; சொற்களை எழுத்துக்கூட்டிச் சொல்லும் போட்டியும் வைக்கப்பட்டது; கலாசாலைகளின் விளையாட்டுப்போட்டிப் பந்தயம் கடைசிநாளில் நடைபெற்றது. அதனோடு அக் கல்விவாரக்-கொண்டாட்டம் இனிது நிறைவேறிற்று.

பள்ளிக்கல்வியொலிபரப்பு

சீனம்: சீனநாட்டுத் தேசீயக் குடியரசின் கல்வியமைச்சர், பள்ளிக்கூடங்களை விட்டு விலகிய இளைஞர் தொடர்ந்து கற்பதற்காக, இவ் வாண்-டில் (1963 செப்டெம்பரில்) டைவான் நகரில் 'பள்ளிக்கல்வியொலிபரப்புத்-திட்டம்' ஒன்று தொடங்கப்பெறும் என்று அறிவித்துள்ளார். ரேடியோமூலம் கற்பிக்கப்படும் இம்முறையால், போதிய அளவு ஆசிரியர்களும் வகுப்பறை-களும் இல்லாத குறையினுல் ஏற்படுங் கஷ்டங்களைக் குறைக்கலாம்—என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்முதல் நாலாண்டு 'ஜூனியர்' உயர்தரகலாசாலைக்குரிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்நிலைமாணக்கர்க்கு இந்த ரேடியோத்திட்டம் பாடங்களைக் கற்பிக்கும். நாளைக்கு நான்கு மணி வீதம் வாரத்தில் ஆறு நாட்களுக்கு இக் கல்வியொலிபரப்பு நடைபெறும். இப்பள்ளிக்கூட ஆண்டு இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் 22 வாரங்கள் நடைபெறும்.

ஒவ்வொரு ஜில்லாவின் நடுவிடத்திலும், ஒலிபரப்புக்குத் துணையாகு மாறு, வகுப்பறையில் பாடங்களைக் கற்பிக்கக் கலாசாலை யொன்று அமைக் கப்படும். அதற்குத் தகுதி உள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். வேண் டும்பொழுது, மாலையிலோ ஞாயிற்றுக்கிழமையன்றோ, மாணக்கர்—கூட்டங்கள் நடைபெறும். இக் கூட்டங்களில் மாணக்கர் தாம் எழுதி-யுள்ள பயிற்சிகளைத் திருத்துதற்கு ஆசிரியரிடம் கொடுப்பர்; ஆசிரியர்-மேற்பார்வையில் வேண்டிய விஞ்ஞானப்பயிற்சிகளைச் செய்வர்; ஒலிபரப் பின்மூலம் கேட்ட பாடங்களில் உள்ள கஷ்டமான பகுதிகளுக்கு விளக்க-மும் தெளிவும் பெறுவர். அன்றியும், நேர்முகமாகச் சந்திக்கும் இக் கூட் டங்கள் ஒழுக்கவளர்ச்சிக்கும் உடற்பயிற்சிக்கல்விக்கும் வாய்ப்பினை அளிக்கும்.

ஆறு ஆண்டு தொடக்கக்கல்வியை முடித்த இளைஞர், இப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படித்தற்கு, தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ள-லாம். செய்யவேண்டிய எழுத்துவேலைகள் அனைத்தையும் முடித்து, பிரிக் கப்பட்ட காலவளவு வகுப்பறையில் பாடங்களைக் கேட்டு, எல்லா எழுத் துப்பரீட்சைகளிலும் தேர்ச்சியைப் பெற்று, இந்நாலாண்டுப்படிப்பை முடித்த மாணக்கர் தகுதிப்பத்திரம் அளிக்கப்பெறுவர். அது முறையாக நடக்கும் 'ஜூனியர்' உயர்நிலைப்பள்ளியில் அளிக்கப்படும் தகுதிப்பத்திரத் துக்கு ஒப்பாகும்.

நைஜீரியா: நைஜீரியா நாட்டில் 'போஸ்ட் ஸ்கூல் சர்டிபிகேட் உயர்தரக் கல்வியைப்' பற்றி 1960-இல் ஆஷ்பி வெளியிட்ட அறிக்கை, அந் நாட்டின் ஆங்கிலப்பேச்சுமொழியின் தாழ்ந்த நிலையைச் சுட்டிக் காட்டிற்று. 1953-54 இலேயே **லாகோஸ்** நிலப்பகுதியில் தொடங்கப்பெற்ற கல்வியொலி பரப்பு, தொடக்கப்பள்ளிகளுக்கான ஆங்கில சம்பாஷணைத்திட்டங்களை-விருத்தி செய்தது. பரீக்ஷார்த்தமாகச் செய்யப்பட்ட இத் திட்டங்களின் பயன்கள்மிக்க ஊக்கத்தையும் திருப்தியையும் அளிப்பனவாக இருக்கின்றன. 'ஃபோர்டு ஃபௌன்டேஷன்', 'பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்' இவற்றின் உதவியைப் பெற்று, 'நைஜீரியன் பிராட்காஸ்டிங் கார்ப்பொ ரேஷன்' தனிப்பள்ளிகளின் தொகுதியொன்றைத் தொடங்கியுள்ளது. வாரத்துக்கு ஒலிபரப்பும் காலத்துள் 14 மணி நேரம் இதற்குப் பயன்படுத்தப் படுகிறது. இப் பாடங்களைத் தயாரிப்பதற்கும், ஒவ்வொரு ஒலிபரப்புப் பாடத்தையும் மேலும் தொடர்ந்து நடத்துதற்கும் வேண்டிய விரிவான குறிப்புக்கள், இத் திட்டத்தில் ஒத்துழைக்கும் ஆசிரியர்களுக்கு அனுப்பப் படுகின்றன.

இப் புதுமுறை ஆசிரியர்களுக்கும் மாணக்கருக்கும் இன்னும் பழக்கமில்லாததொன்று. பல பள்ளிக்கூடங்களில்—சிறப்பாகத் தொடக்கப் பள்ளிகளில்—ரேடியோக்கருவிகள் இன்னும் வாங்கி வைக்கப்படவில்லை. பல வயசுத்தரத்திற்கும், 'நைஜீரியா'ப் பள்ளிப்பாடத்திட்டத்தை ஒட்டிய முறையில் அமைத்த எல்லாப்பாடங்களுக்கும் ஏற்றவாறு, தக்க ஒலிப்பதிவு-

கள் கொண்ட ஒரு பெரிய நூல்நிலையம் அமைத்தல் வேண்டும். இன்னோரன்ன குறைகள் இருப்பினும், இத் திட்டம் ஊக்கம் அளிப்பதாகவே உள்ளது. 'நைஜீரியன் பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன்' வரும் ஆண்டில், பரீக்ஷார்த்தத்திட்டங்களை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏறக்குறைய எல்லாத்திட்டங்களும், 'நைஜீரியா' நாட்டு மாணக்கர்நிலைக்குத் தக்கவாறு, சிறப்புமுறையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். முறையாக நடக்கும் பள்ளிக்கூடப் பாடத்திட்டங்களோடும் பொதுப் பரீட்சைகளோடும் இக் கல்வியொலிபரப்புமுறையை இணைப்பதற்குச் செய்யவேண்டிய தொடக்கவேலை இன்னும் மிகுதியாக உளது.

தெற்கு ரொடீஷியா: தெற்கு ரொடீஷிய அரசாங்கத்தாரால் ஒரு ரேடியோப்பள்ளித்திட்டம் தொடங்கப்பெற்றுள்ளது. இதில் 15,00 ஆஃப்ரிக ஆசிரியர்கள் கலந்துகொள்ளுகின்றனர். இத் திட்டத்தால் 6-ஆம் வகுப்புவரை உள்ள-ஏறக்குறைய 4 லட்சம் எண்ணிக்கை உள்ள— பள்ளிச் சிறுவர்கள் இதன் பயனைப் பெறுவர். The Federal Broadcasting Corporation's African Service-இன் தெற்குப்பிரதேசத்தைச் சார்ந்த நடுத்தர அலைகளின்மூலமும் சிற்றலைகளின்மூலமும், பிப்ரவரி 9 முதற் கொண்டு, ஆசிரியர்களுக்கென, ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும், 45 நிமிஷநேரம் ஒலிபரப்பப்பட்டுவருகிறது. தற்பொழுது தபால்மூலம் பெறும் போதனைமுறையில் இரண்டாண்டுப்பயிற்சியைப் பெறும் ஆசிரியர்களுக்கு மேலும் அறிவை வளர்த்தற்குப் பயன்படுத்தவே, இவ்வொலிபரப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்பலர் தனிமையில் தங்கள் பணியைச் செய்துவருகின்றனர். அண்மையில் இருக்கும் நகரத்திற்கும் ஆசிரியர் வாழும் ஊருக்கும் இடையே நூற்றுக்கணக்கான மைல் தூரம் இருக்கின்றது. அடுத்த பள்ளிக்கூடமும் அதுபோலவே பல மைல்களுக்கு அப்பால் உளது. அவ் வாரஒலிபரப்பில் ஆசிரியர்களுக்கென்று 15 நிமிஷம் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. பின்னர், ஆசிரியத்தொழிற்றுறைக்குத் தொடர்புள்ள விஷயங்களைப் பற்றி பிரசங்கங்களும் விவாதங்களும் நடைபெறும்.

இங்கிலாந்து: இங்கிலாந்து தேசத்திலுள்ள இரண்டு 'டெலிவிஷன்' குறுக்குநெடுக்கு இணைப்புக்கருவிகள் பள்ளிக்கூட உபயோகத்திற்காகப் பல திட்டங்களை வகுத்து அளிப்பினும், அவற்றைக் காண்பதற்கு ஆசிரியர்பெரும்பாலோர்க்கு நேரமில்லை. ஏனெனின், அவர்கள் தம் கற்பிக்குந் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந் நிலைக்குப் பரிகாரமாக, பி. பி. ஸி.-யும், 'அஸோஷியேடட் ரிடிஃப்யூஷன் டெலிவிஷன்' ஸ்தாபனமும், அவ்வாசிரியர்கள் ஓய்வுக்காலங்களில் கண்டு பயன்பெறுமாறு, சிறப்புக்காட்சிகளைக் காட்ட ஏற்பாடு செய்துள்ளன. இன்னும் 'டெலிவிஷன்' கருவி அமைக்கப்படாத பள்ளிகளில் பணிசெய்யும் ஆசிரியர்கள், இத்தகைய தொண்டுகளின் மதிப்பைப்பற்றிய தங்கள் கருத்தை வெளியிடுதல் வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். ஒவ்வொரு தரத்து மக்களுக்கும் கல்விமுறை 'டெலிவிஷன்' செய்யப்படுதல் வேண்டும் என்பதனை விளக்கும் "மாதிரிகள்" ஆசிரியர்களுக்குக் காட்டப்படுகின்றன.

—UNESCO Features

CONNEMARA LIBRARY

ஆசியா

காலிஃபோர்னியாவில் உள்ள 'ஸ்டான்ஃபோர்டு' பல்கலைக்கழகத்தில் மார்ச்சு 30-ஆந் தேதியன்று தொடங்கி மூன்று நாள் ஒரு மகாநாடு நடைபெற்றது. 'பஸிஃபிக் இனத்தினருக்குக் கல்விச் சேமிப்பு' - என்பது அம் மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயம். இறுதிநாளில், ஃபிலிப்பைன்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'பிரஸிடெண்ட்' கார்லோஸ் P. ரோமுலோ என்பவர் சொற்பொழிவாற்றினர். அது பின் வருமாறு :

"ஆசியா, தனக்கு வேண்டிய கல்விமுறையை, அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் ஒட்டி அமைப்பதற்குத் தக்க சக்தியைப் பெற்றிலது. மற்றைநாடுகளில் திருப்தியளிக்கும் கலைக்கூடவகைகளை ஆசியாவில் அமைக்காமல், அந் நாட்டுக்குத் தேவையானவற்றையே நிறுவ உதவுதல் வேண்டும்.

"வெளிநாட்டு நிபுணர்கள், ஆசியநாடுகளில் உள்ள அறிஞர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை ஆராய்ச்சியில் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொள்ளாமல் அவர்கள் நாட்டு நன்மைகளையும் உள்ளத்தில் கொள்ளாமல், அவர்களைத் தமக்குக் கருவிகளாகவே கொண்டு, தம் புகழையும் கௌரவத்தையும் வளர்க்கப் பயன்படுத்திக்கொள்கின்றனர்—என்னும் உண்மையை ஆசிய நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் உணரத் தொடங்கிவிட்டன.

"மேல்நாட்டுப் பண்பாட்டின் உயர்நிலையை ஆசியா அடைதற்குப் பரிகாரம் தேடவேண்டியது அவசியமே. ஆயின், அம முயற்சியில் ஆசிய அறிஞர்கள் ஏமாற்றமடைதலாகாது ; உலகத்தின் பிற பகுதிகளில் உள்ள அறிஞர்கள் தாம் ஏதோ பேராதரவு காட்டுவதாக ஆணவவெண்ணம் கொள்ளலும் ஆகாது.

அசட்டுத்தைரியத்தாலும் முருட்டுத்தனத்தாலும் வியப்புக்குரிய மாற்றுப்படைப்புக்களாலும், மேல்நாட்டார், தம் பொருள் நலனையும் அறிவுத் திறத்தையும் அடைதற்கு உரிய நாடு ஆசியா அன்று என்று அறிக. ஆசியாவில் உள்ள சமூகங்கள் பலதிறப்பட்டவை. ஆதலின், அவற்றின் பல்கலைக்கழகங்கள் தம் பண்பாடுகளை வெளிப்படுத்த வேண்டுமாயின், அவற்றின் நேர்மையும் தூய்மையும், நல்லதிர்ஷ்டவேட்டையாடும் பிற நாட்டு அறிஞர்கள் முதலியோரிடமிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும்.

"ஆசியப்பல்கலைக்கழகங்கள், தம் பண்பாட்டுக்கு வேண்டியவற்றை ஆராய்ச்சிசெய்யும் நிலையங்களாகக் கருதப்பட்டு, மதிக்கப்படுதல் வேண்டும். அவை உலகநாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் இப்பொழுது உதவுவதைவிட இன்னும் மிகுதியாக விரைவில் உதவும் நிலைக்குக் கொணர, அவற்றை ஆதரித்து வளர்த்தல் வேண்டும்.

"ஆசியாவில் முன்னேற்றமடையாதனவும் முயன்று முன்னேற்றமடைந்துகொண்டிருப்பனவும் ஆகிய நாகரிகங்களின் வளர்ச்சிக்கு வேண்டுவனவற்றை நன்கு உணர்ந்து, கல்வியுதவி அளிக்கப்படல் வேண்டும். அன்றியும், அவ் வளர்ச்சியின் நேர்மையும் முறையும் மேலைநாடுகளில் உள்ளவற்றினின்றும் மாறுபட்டவை என்பதனையும் தெரிந்து மதித்தல் வேண்டும்."

இம் மகாநாடு கூட்ட ஆதரவளித்த WCOTP-இன் பிரதிநிதியாக, அந்த ஸம்மேளனத்தின் ஆசியச்சிறப்பதிகாரியான வில்லியம் உல்ரிச் என்பவர் ஆங்குச் சென்றிருந்தார்.

World Confederation of Orgaaizations
of the Teaching Profession
1227 16rh St, N, W.. Washington 6, D. C., U.S,A..

உலக ஆசிரியர் ஸம்மேளனம் (WCOTP)

1227, பதினாருந்தெரு, N. W., வாஷிங்டன் 6, D. c. U. S. A.

'எகோ' என்னும் இப் பத்திரிகை WCOTP-ஆல் மாதந்தோறும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் என்னும் மொழிகளில், 'வாஷிங்டன் D.C-யிலிருந்து வெளியிடப்படுகின்றது; 'அரபி' மொழியில் 'பீரட்டிலிருந்தும், 'ஜப்பான்' மொழியில் 'டோக்கியோவிலிருந்தும், கொரிய மொழியில் 'சியோலி'லிருந்தும், போர்ச்சுகீஸில் 'ஸா பௌலோ'விலிருந்தும், 'வியட்நாம்' மொழியில் 'ஸைகோவி'லிருந்தும் வெளியிடப்படுகின்றது. பிரத்தியேக ஆங்கிலப்பதிப்புக்கள் 'ஆக்ரா', நைரோபி', ,மதராஸ்' என்னும் இடங்களிலிருந்து வெளியிடப்படுகின்றன. இச் செலவில் ஒரு பகுதியை UNESCO ஸ்தாபனம் அளித்துதவுகின்றது. எகோ உறுப்புச்சங்கங்களுக்கு விநியோகப்படுத்தப்படுகின்றது. ஆயின், இதனைப் பெற விரும்வோரும் நிலையங்களும் சந்தாவை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸர் ரோனல்ட் கௌல்ட்,	தலைவர்
S. நடராஜன்,	உபதலைவர்
வில்லியம் G. கார்,	ஸெக்ரெடரி-ஜனரல்
ஜான் M. தாம்ஸன்,	உதவி ஸெக்ரெடரி-ஜனரல்
பால்டுவின் லி,	டைரக்டர், இன்பர்மேஷன் ஸர்விஸஸ்
பார்பாரா P. ஹாஸ்கின்ஸ்,	ஆசிரியர் (Editor)

துணை ஆசிரியர்கள்:

ராபர்ட் லாப்
ஜீன் பால் ஸவரி
ஜாகலின் லாஃபலர் (வாஷிங்டன், D.C.)
அஃபிஃப் பால்பகி (பீரட்)
ஹிரோஷி யோஷிடா (டோக்கியோ)
ட்ரூட் ஹாப்ட்பான் (ஸா பௌலோ)
ட்ரான் பிச் லன் (ஸைகோன்)
S. நடராஜன் (மதராஸ்)
மியுங்—ஸூ லிம் (ஸியோல்)